சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No:56/2019 Date: 10.03.2025

பிரதிவாதி தரப்பு சாட்சி-4(Dw4) ன் வாக்குமூலம் (1872 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திருமதி.K.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராணி | சாதி | : | |
| த/பெ | : | தவசி | சமயம் | : | |
| கிராமம் | : | விருதுநகர் | தொழில் | : | வருவாய் ஆய்வாளர் |
| தாலுகா | : | விருதுநகர் | வயது | : | 43 |

முதல் விசாரணை-

நான் விருதுநகர் வச்சகாரப்பட்டி வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க விருதுநகர் தாசில்தார் எனக்கு அதிகாரம் அளித்துள்ளார். அந்த அதிகார கடிதம் **சா.சா.ஆ.2**. நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பசலி எண்.1401-1430 வரை கொண்டு வரச்சொல்லி அழைப்பாணையில் கோரப்பட்டிருந்தது. பசலி எண்.1426, 1427, 1428 கொண்டு வந்துள்ளேன். அவை **சா.சா.ஆ.3**(வரிசை)(2 தாள்கள்).மற்ற ஆவணங்கள் அலுவலகத்தில் இல்லை.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் நீதிமன்றத்தில் இருந்து வந்து அழைப்பாணையின் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ஆதியில் யார் பெயரில் தாவா சொத்திற்கு தீர்வை ஏற்பட்டிருந்தது என்று கேட்டால் எனக்கு தெரியாது. எங்கள் அலுவலகத்தில் மேற்படி 3 பசலிக்கான ஆவணங்கள் மட்டும் தான் இருந்தது, மற்ற ஆவணங்கள் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை.

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

தாவா சொத்து ராம்கோ சிமிண்ட் பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்கு ஆட்சேபணை எதுவும் வரவில்லை. ராம்கோ சிமிண்ட் நிறுவனத்திற்கு

சொத்தின் மீதான உரிமையை பாதிக்கும் வகையில் வருவாய் துறையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(2, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு முன்வராததால் குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.)